Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP

**C.C. No: 187 of 2024**

DATE : 14.05.2026

Depositions of witness for Prosecution

PW: 9

| | | | |
|---|---|---|---|
| Name | ராஜா | Caste | |
| Father/Husband's Name | சௌந்தரபாண்டி | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14 th day of May 2026

**2ம் எதிரி இறந்துவிட்டார். 1, 3, 4 எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் திரு. மாரிமுத்து அவர்கள் ஆஜர்.**

**(சாட்சி காணொளி மூலமாக விசாரணை செய்யப்பட்டார்)**

**<u>முதல் விசாரணை</u> –**

நான் தற்பொழுது கன்னியாகுமரி மாவட்டம் மதுவிலக்கு அமல் பிரிவில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.07.2015 அன்று நான் வத்திராயிருப்பு வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்த பொழுது வட்டத்திற்கு உட்பட்ட கூமாபட்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் முனியாண்டி என்பவர் பதிவு செய்த கூமாபட்டி காவல் நிலைய குற்ற எண் 75/2015, சட்டப்பிரிவுகள் 294(b), 323 IPC and 3 of TNPPDL Act ன் கீழ் பதிவு செய்த வழக்கினை முதற்கட்ட விசாரணை செய்து வைத்திருந்த நிலையில் வழக்கினை என்னுடைய விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடங்கள் சார்பு ஆய்வாளர் ஏற்கனவே தயார் செய்து வைத்திருந்ததால் நான் தனியாக தயார் செய்யவில்லை.

சார்பாய்வாளர் விசாரணை செய்த சாட்சிகள் யாசின் முகமது, இதயத்துல்லா, ஷேக் முகமது, யூசுப் அன்சாரி ஆகியோர்களை விசாரணை செய்ததில ஏற்கனவே சார்பு ஆய்வாளரிடம் கூறியதையே என்னிடமும் கூறியதனால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. இவ்வழக்கில் 1 வது எதிரியான ஜோசப் என்ற முகமது யூசுப் என்பவர் திருவில்லிபுத்தூர் அமர்வு நீதிமன்றத்தில் 05.08.2015 அன்று முன் பிணை பெற்றுள்ளார். பின்னர் 19.07.2016 அன்று இவ்வழக்கில் காயம்பட்ட யூசப் அன்சாரி என்பவருக்கு சிகிச்சை அளித்த வத்திராயிருப்பு அரசு மருத்துவமனை மருத்துவர் திருமதி ஜெயலட்சுமி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றிதழ் பெற்றேன்.

பின்னர் வழக்கின் எதிரிகளால் சேதம் ஏற்படுத்தப்பட்ட மோட்டார் போர்வெல் மற்றும் இதர வகைகளுக்கு சேதமதிப்பு ரூ.51,300/- என சான்று வழங்கிய ராமசாமி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து சேதம் மதிப்பு சான்றிதழ் பெற்றேன். இவ்வழக்கின் சாட்சியான ஜியாவுதீன் என்பவரை விசாரணை செய்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். சார்பு ஆய்வாளர் முனியாண்டி கைப்பற்றிய வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **படிவம் 91 அ.சா.ஆ. 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. படிவம் 91 மூலம் கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் முறையே சா.பொ.1 முதல் சா.பொ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கின் சாட்சிகளின் வாக்குமூலத்தின் அடிப்படையிலும், ஆவணங்களின் அடிப்படையிலும் உண்மையான வழக்கு என தெரிய வந்ததால் 27.07.2016 அன்று சட்டப்பிரிவுகள் 294(b), 323 IPC and 3 of TNPPDL Act ன் கீழ் புலன் விசாரணையை முடித்து எதிரிகளின் மீது இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை –**

இந்த வழக்கின் புலன் விசாரணையை நான் எந்த தேதியில் என்னுடைய விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன் என்றால் 16.07.2015 எடுத்துக்கொண்டு கடந்த 27.07.2016 அன்று என்னுடைய விசாரணையை முடித்துக் கொண்டேன்.

ஒரு வருடம் கழித்து தான் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்து உள்ளேன் என்று சொன்னால் சரிதான். சாட்சி ஜியாவுதீன் முஸ்லீம் மதத்தை சார்ந்தவர் என்றால் சரிதான். 1வது எதிரி கிருஸ்துவ மதத்தில் இருந்து முஸ்லீம் மதத்திற்கு மதம் மாறியவர் என்றால் சரிதான். ஆனால் மதம் மாறியதற்கான ஆவணங்கள் எதுவும் இல்லை. 1வது எதிரி மதம் மாறிய காரணத்தினால் சாட்சி ஜியாவுதீன் 1வது எதிரியை ஆலயத்திற்குள் வரக்கூடாது என்று பிரச்சனை செய்தார் என்று சொன்னால் என்னுடைய புலன் விசாரணையில் அவ்வாறு எதுவும் தெரியவில்லை.

1வது எதிரி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் ஒரு வழக்கு தொடர்ந்து அந்த வழக்கில் அவருக்கு ஆதரவாக மசூதியில் தொழுவதற்கு யாரும் இடைஞ்சல் செய்யக்கூடாது என்று ஒரு உத்தரவு பெற்றார் என்றும் அந்த உத்தரவின் அடிப்படையில் காவல் நிலையத்தில் நான் சாட்சிகளை வரவழைத்து 1வது எதிரி மசூதியில் தொழுவதை தடை செய்யக்கூடாது என்று எழுதி வாங்கி நான் அதில் கையெழுத்து செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் உத்தரவின் அடிப்படையில் சாட்சிகளை வரவழைத்து காவல் நிலையத்தில் வைத்து 1வது எதிரி மசூதியில் தொழுவதை தடை செய்யக்கூடாது என்று எழுதி வாங்கிவிட்டு அதில் நான் கையெழுத்து செய்துவிட்டு தற்பொழுது வழக்குக்கில் கையெழுத்து செய்யவில்லை என்று பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

1வது எதிரி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் தாக்கல் செய்த Crl.O.P. (MD) No. 13034 / 2015 வழக்கில் என்னையும், இந்த வழக்கில் உள்ள சாட்சிகளையும் தரப்பினராக சேர்த்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 14.07.2015 அன்று நான் எந்த காவல் நிலையத்தில் பணிபுரிந்தேன் என்றால் வத்திராயிருப்பு வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்தேன். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் எதிரி தாக்கல் செய்த வழக்கில் நான் தரப்பினராக சேர்க்கப்பட்ட விபரமும் மேற்படி மனுவில் மாண்புமிகு

உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் விபரமும் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. வழக்கில் தீர்ப்பு பிறப்பித்த விவரம் எனக்கு தெரியும் என்றும் வழக்குக்காக தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

புகார் மனுவில் யார் யாரை தாக்கினார் என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. புகார் மனுவில் எதைக் கொண்டு தாக்கியதாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. புகார் மனுவில் எதிரிகள் அ.சா.1 யை கையால் தாக்கியதாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் புகார் மனுவை பார்க்காமலேயே சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. புகார் மனுவில் எந்த எதிரிகள் எந்த தகாத வார்த்தையை உபயோகம் செய்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. புகார் மனுவில் எதிரிகள் எந்த தகாத வார்த்தையால் பேசினார்கள் என்று சொல்லப்படவில்லை என்றும் நான் வழக்குக்காக சொல்லியுள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

புகார் மனுவில் புகார்தாரரை எதிரிகள் உடம்பில் எந்த பகுதியில் தாக்கியதாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. புகார் மனுவில் சொல்லப்படவில்லை என்றும் நான் புகார் மனுவில் சொல்லப்பட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. புகார் மனுவில் வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்ததாக சாட்சிகள் பெயர்களை குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. புகார் மனுவில் சாட்சிகளின் பெயர்கள் குறிப்பிட்ட சொல்லப்படவில்லை என்றும் நான் வழக்குக்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. புகார் மனுவில் புகார்தாரருடன் சாட்சி யூசுப் அன்சாரி என்பவர் உடன் இருந்ததாக குறிப்பிட்டு எங்கேயும் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. புகார் மனுவில் யூசுப் அன்சாரி புகார்தாரருடன் இருந்ததாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றும் வழக்குக்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

புகார் மனுவில் புகார்தாரரின் சொத்துக்களை யாரோ சேதப்படுத்தியதாக தான் சொல்லியுள்ளார் என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடைபெற்றதாக சொல்லக்கூடிய இடத்திற்கு அருகில் இருந்த கடையின் உரிமையாளர்களை விசாரித்து சாட்சிகளாக இந்த வழக்கில் நான் சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். சாட்சிகளின் வாக்குமூலங்கள் மடிக்கணினியில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். சாட்சிகளின் வாக்குமூலங்களில் அவர்களுடைய வாக்குமூலங்கள் மடிக்கணினியில் பதிவு செய்யப்பட்டதாக சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சாட்சிகளை விசாரணையை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

என்னுடைய விசாரணையில் அத்தாட்சியில் கண்டுள்ள சாட்சிகளான இதயதுல்லா மற்றும் ஷேக் முகமது ஆகியவர்கள் சம்பவ இடத்திலிருந்து மூன்று உடைந்த பைப்புகள் கைப்பற்றியதாக சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய விசாரணையில் சாட்சிகள் உடைந்த பைப்புகளை கைப்பற்றியதாக சொல்லவில்லை என்றும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்கள் பொதுவாக உடைந்த நிலையில் கிடைக்கக்கூடிய சொத்துக்கள் என்றும் மேற்படி வழக்கு சொத்துக்களை மோசடியாக உற்பத்தி செய்து இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் எந்த வழக்கு சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்றும் முறையாக விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது குற்ற இறுதியா இருக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு